# நந்தி

மாலை 3 | திருவள்ளுவர் ஆண்டு 1998 சித்திரை—மே 1966 | மணி 7


## இனியாவது கவனிப்பார்களா?

ஆயுர்வேத மருந்துக்கடை என்னும் பெயர் தாங்கிய கடைகளில், மயக்கம் தரக்கூடிய பொருள்கள் கலந்த ஆசவ, அரிஷ்டங்கள் கட்டுப்பாடின்றி விற்கப்பட்டு வருவதை அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் இதற்கு முன் நாம் எழுதியிருந்தோம். ஆனல் இதுவரை தமிழக அரசினரின் மதுவிலக்குத் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை யென்பது வருந்தத் தக்கது.

குமரி முதல், தமிழகத்தின் வட எல்லை வரையில், சிறு சிறு கிராமங் களில்கூட, ஆயுர்வேத மருந்துக் கடைகள் பெருகிவிட்டன. சென்னை நகரிலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள இடங்களிலும் இந்தக் கடைகள் நிறைந்து விட்டன.

பதிவு பெற்ற வைத்தியர்களின் நேர் பரிசோதனைக்கு வரும் நோயாளிகளுக்கு அங்கிகாரம் பெற்றுள்ள வைத்தியசாலைகளில், பதிவு பெற்ற வைத்தியர்களின் ஒப்பிட்ட சீட்டுகளுக்குத்தான் ஆசவ, அரிஷ்டங்கள் விற்கப்படவேண்டுமென்று அரசினருக்கு எடுத்துச் சொல்லப் பட்டது. எனினும் இது விஷயமாக மதுவிலக்கை அமுலாக்கும் பொறுப் புள்ள அதிகாரிகள் எவரும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை.

நோயாளிகள், தங்கள் நோய் தீர்த்துக் கொள்ள ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ள ஆசவ, அரிஷ்டங்களை வாங்கி உபயோகிப்பதில் தவறில்லை. ஆனல் போதை உண்டாக்கிக் கொள்வதற் காக, மயக்கம் தரும் வஸ்துக்கள் கலந்த அரிஷ்டங்களை வைத்தியப் பயிற்சியேயில்லாத கடைக்காரர்கள் விற்பதால் மக்களுடைய உடல் நிலையை எவ்விதம் பாதிக்கக்கூடும் என்பதை யோசிக்குமிடத்து, அரசினர் எவ்வளவு துரிதமாக இதில் நடவடிக்கை எடுக்க வேண்டியதவசிய மென்பது புலப்படும். எடுத்துக் காட்டாக, "மதுகாசவம்" என்ற ஒரு பொருள், தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்கு விற்கும் ஒரு பெரிய நிறுவனம் சென்னையில் இயங்கி வருகிறது. இதன் கிளைகள்

ஏழை ஹரிஜனங்கள், தொழிலாளர்கள் வாழும் குடிசைகளுக்கருகில் திறுவப்பட்டு, கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஆசவத்தில் சேர்க்கப்படும் மயக்கப் பொருள்களைப்பற்றிக் கேட்கும் போதே, நம் உடல் நடுங்குகின்றது. இப்பொருள்களை வாங்கி உண்ணுகிற வர்கள் மரணமடைந்தால் இதற்கு பொறுப்பாளிகள் யார்? இவற்றை விற்கும், வைத்திய அறிவும், அனுபவமுமில்லாத கடைக்காரர்களா? அல்லது உற்பத்தியாளர்களா? இதனுல், ஆயுர்வேத மருந்துகளுக்கு பெரும் அளவில் இழுக்கு ஏற்பட்டிருப்பதும் கவனிக்க வேண்டிய அம்ச மாகும்.

மதுவிலக்கு அமைச்சரின் அலுவலகம், இனியும் தாமதமின்றி நடவடிக்கை எடுப்பார்களென்று நம்புகிறோம்.

## எமது அனுதாபம்

சென்னை, அடையார், கூட்டுறவு நாட்டுமருந்து உற்பத்திசாலையில் சித்த மருத்துவத்துறை பார்வையாளராக, பல்லாண்டுகள் பணியாற்றி வந்த சித்த வைத்தியர் திரு. எம். கே. வீரராகவன், சித்திரைத் தமிழ் புத்தாண்டு தினம், இறைவனடி சேர்ந்து விட்டதை அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

சித்த மருந்துகள் தயாரிப்பில் பல்லாண்டுகள் அனுபவமுள்ளவர் திரு. வீரராகவன். சென்னையில் மிகவும் பிரபல சித்தவைத்தியராகயிருந்த திரு. கன்னையா நாயுடு அவர்களின் புதல்வர். அடையார் மருந்து செய்சாலை ஒரு நல்ல பணியாளரை இழந்து விட்டதுமட்டுமன்றி சித்த வைத்தியத் துறைக்கே அவருடைய மறைவு, ஈடு செய்யமுடியாத நஷ்ட மாகும். திரு. வீரராகவன் குடும்பத்திற்கு எமது அனுதாபத்தை தெரிவித் துக் கொள்கிறோம். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## மருந்துக் கட்டுப்பாடு

இந்திய அரசினர் ஏற்படுத்தியிருக்கும் நாட்டு மருந்து கட்டுப்பாடு சட்டத்தை அமுல் செய்து, மருந்து உற்பத்தியாளர்களை கண்காணிக்க, ஆய்வாளர்கள் (Drug Inspectors) நியமிக்கப்படுவார்கள். நவீன மருத்துவத் துறையில் தேற்சி பெற்றவர்கள்தான், ஒவ்வொரு மாநிலத் திலும் ஆய்வாளர்களாக தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறுர்கள். நாட்டு மருந்துகளின் தரம், அளவு முதலியவைகளை நிர்ணயிக்கும் விஷயமும் பரிசீலனையிலிருந்து வருகிறது. ஆனுல் நாட்டுமருந்து உற்பத்திசாலைகளை கண்காணிக்கும் ஆய்வாளர்கள், நவீன மருத்துவம் மட்டும் தெரிந்தவர்களாயிருந்தால் பயனில்லை. நாட்டு மருந்து செய்

முறையிலும் அனுபவமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தமிழகத்திலுள்ள நாட்டு மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் இந்த விஷயம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. நாட்டு மருந்து உற்பத்தியில் அனுபவமில்லாத ஆய்வாளர்களுக்கு நாட்டு மருந்துகள் செய்முறை முதலியவற்றில் பயிற்சியளிக்க ஒரு திட்டத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்திய அரசினர் ஒரு நிபுணர் குழுவை அமைத்திருக்கிறார்கள். இக்குழுவில், தமிழக அரசினர் முன்னாள் இணைப்பு மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேத பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ள டாக்டர். வி. நாராயணஸ்வாமி ஐயர், சித்த மருத்துவப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ள டாக்டர். க. சு. உத்தமராயன், "நந்தி" ஆசிரியர் தவத்திரு. சுந்தரானந்த சரசுவதி அடிகள் இவர்களும் இக்குழுவில் உறுப்பினர்கள். இக்குழுவின் கூட்டம் மே மாதம் 5, 6-ம் தேதிகளில் வாரணசியில் நடைபெறுகிறது.

---

## நூல்கள் வரவு

(1) உணர்ச்சியும் உருவமும். ஆக்கியவர்: குமாரி எஸ். லீலா பி.ஏ., விலை: ரூ. 2. ஸ்டார் பிரசுரம், 66, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5.

(2) பூங்கொத்து: ஆக்கியவர். குமாரி எஸ். லீலா பி. ஏ. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். 6/30 மவுண்டுரோடு. சென்னை 2.

இவ்விரு நூல்களும் எமது பார்வைக்கு வரப்பெற்றோம் உணர்ச்சியும் உருவமும், ஒரு சிறு கதைத் தொகுப்பு. தமிழகத்தின் புகழ் பெற்ற எழுத்தாளர் திரு. பி. எஸ். ராமய்யா இதற்கு அணிந்துரை யளித்துள்ளார்.

பூங்கொத்து: இந்தக் குழந்தை அறிவுக் கதைகள் சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டவை.

விரைவில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இளம் எழுத்தாளர் குமாரி லீலாவைப் பாராட்டுகிறோம்

# ஒரு நல்ல வாய்ப்பு

உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினருக்கோ, நண்பர்களுக்கோ, தீராத நோயினால் துன்பம் ஏற்பட்டு, பல சிகிச்சைகள் செய்தும், பலன் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால்—

நோயாளியின் வயது, திருமணம் ஆனவரா, குழந்தைகள் உண்டா, நோய் வந்த விவரம், காலம், செய்து கொண்ட சிகிச்சை, முதலிய விவரங்களை, தெளிவாகத் தமிழில் எழுதியனுப்பவும்.

குணம் அளிக்கக் கூடிய இலகுவான சிகிச்சை, நீங்களே மருந்தை தயாரிந்துக்கொள்ள ஆலோசனை முதலிய விவரம் தபாலில் அனுப்பப்படும். சிகிச்சை முறை தெரிவிக்க கட்டணம் இல்லை. வைத்திய நிபுணருடைய ஆலோசனை இலவசம்.

ஆனாலும், எழுத்துக் கூலி, தபால் செலவு முதலியவற்றிற்காக, உங்கள் கடிதத்துடன் ரூபாய் இரண்டு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். ங்ஙனமில்அலாத கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

*கடிதம், மணியார்டர் அனுப்ப முகவரி:*

வைத்திய ஆலோசகர்,

C/o "நந்தி" பதிப்பகம்

9, கஜபதி நாயுடு தெரு, சென்னை - 30

# காயகல்பத்தின் சிறப்பு

## ஒரு அனுபவ உண்மை

**(சித்த-ஆயுர்வேத வைத்தியர், எஸ். கலியாணராமன், சென்னை )**

சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னர், கண்கண்ட கலியுகத் தெய்வமாய் விளங்கும், திருப்பதி - திருமலையில் வாசம் பண்ண நேர்ந்தது. அந்த காலத்தில் ஸ்ரீ மகந்துவின் அதிகார பரிபாலனத் தின் ஆதிக்கத்தில் ஸ்ரீ திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள் இருந்து வந்தது. பனி அடர்ந்து எதிரில் இருப்பவர்கள் காண முடியாமல் குளிர் மிகுந்து இருக்கும், நான்கு மாட வீதிகள் பின் புறத்தில் மரஞ்செடி கொடிகள் அடர்ந்த காடாக இருக்கும், மிருக வகைகள், சிறுத்தை புலிகள் விசேஷம். வீட்டின் பின்னால் மறந்து போய் கன்றுக் குட்டி, மாடு, நாய்கள் சிக்கிக் கொண்டால் இரவு நேரங்களில் இறையாய் விடும். புஷ்கரணியில் ஸ்னானம் பண்ண வேண்டுமானால் பக்தி பரவச உள்ளத்தின் காரணமாக தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்க வேண்டியதுதான். தண்ணீரின் பேரிலேயே பனிப்புகைகள் படிந்து கொண்டிருக்கும். அதிலும் ஸ்ரீ ஆதிவராக புஷ்கரணி ஆழம் அதிகமானதால் தண்ணீர் குளிர்ச்சி அதிகமான தாயும், பளுவுள்ளதாயும் இருக்கும். தம்பதிகளாய் அகப்பட்டுக் கொண்டால் சங்கல்பம் செய்து வைக்கும் சாஸ்திரிகளுக்கு மிகவும் கொண்டாட்டம்தான். ஸ்திரி புருஷர்கள் இருவரையும் கட்டியிருக் கும் துணிகளை முடிபோட்டுவிடுவார்கள். முதல் தடவை இருவரை யும் சேர்ந்து தண்ணீரில் நன்றாய் மூழ்கி எழுந்திருக்க சொல்லி, தொடையளவு தண்ணீரில் நிற்க வைத்து விடுவார்கள். பழக்கமில் லாமல் ஸ்திரீ புருஷர்கள் துணிகள் கட்டிக் கொண்டிருப்பார்கள். குளிர்ச்சியான தண்ணீரில் நனைந்து தேகத்தை இருக்க சுற்றிக் கொண்டிருக்கும். குளிரோடு தேகம் நடுக்கம் எடுத்து விரல்கள் விறைத்து போகும்படி ஆய்விடும். சங்கல்பம் பண்ணிவைக்கும் சாஸ்திரியோ மந்திரத்தை ஆதியோடந்தமாய் உலகில் இருக்கும் பாவச் செயல்கள் யாவும் அடுக்கடுக்காய் கூறிக்கொண்டு வளர்த்துக் கொண்டே போவார். அதற்குள் தம்பதிகளுக்கு குளிர் தாளாமல் பொறுமை இழந்து விடுவார்கள். விடமாட்டான் சாஸ்திரி. தேகம் பல் தவடை உதறி, உதறி அதிர்ந்து போன தருணத்தில் தானம் கேட்பார். விட்டால் போதும் என்று சில நேரம் வாதாடி ஏதோ தானத்துக்கு ஒத்துக் கொண்டு மறுபடியும் சங்கல்ப ஸ்நானம் பண்ணி முடியும். மனதிலும் முக்கியமான ஸ்நான கட்டம் முடிந்தது என்று சாந்தியடைவார்கள். சின்னஞ்சிறு குழந்தை களையோ பெரியவர்களே தாளமுடியாத குளிர்ச்சியிலே, மொட்டை அடித்து, ஸ்ரீநிவாஸா, கோவிந்தா, ஸ்ரீ வேங்கடாசலபதே என்று கூறிக்கொண்டே, பலவந்தமாகவே தண்ணீரில் மூழ்கடித்து ஸ்நா னம் பண்ணி வைத்து விடுவார்கள். குளிர் நடுக்கம், பதட்டம், சிரமம் எல்லாவற்றையும் ஸ்ரீ யப்பதியான ஸ்ரீநிவாஸனின் பேரில் ஏகாக்கிர சித்தங்கொண்டவர்களாய் பாரத்தை போட்டுவிட்டு காரியங்களை சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வார்கள். இந்த

புஷ்கரணியில் அடங்கி இருக்கும் தண்ணீரோ பலவகை ரசாயன, சஞ்சீவித் தன்மை வாய்ந்த செடி கொடி, மர, புல்வகைகளின் சாரத்தை கிரகித்து மலை காடுகளிலிருந்து கசிந்து வந்த தண்ணீராகும் சங்கல்ப சாஸ்திரி பக்தி பரவச காரணம் வெளிப்படையாக யிருப்பினும், இந்த உலோக ரசாயன காரசார வகை புண்ணிய தீர்த்தத்தில் சில நேரம் ஊறியிருப்பதால் அதன் சக்தி வேகத்தால் குளிர் உதறல் ஏற்பட்டு, பக்தியோகத்தால் சித்தம் நிலை சற்று நேரமாவது இருக்கும்படியான தன்மையை உண்டாக்கி விடுகிறது. இங்குதான் தண்ணீரின் காரசாரப் பெருமை ரகசியமாகவே அடங்கி விட்டது, இதைத் தெய்வத் தன்மை பொருந்திய ஒரு சித்தர் "ஆலப்பழ மகிமை யாரறிவார் இவ்வுலகில்" என்கிறார். இந்தகாரசார ஜெயநீர் தண்ணீரின் சத்தால்தான் கடுகினும் சிறிய ஆலம் விதை உலகிலேயே பெருமளவு, நீண்ட காலம் ஜீவித்திருக்கும் பெரிய விஸ்தாரமிகுந்த மரங்களாய் இருப்பதை நம் கண் முன்னே நாம் காண்கிறோம். இதற்கு காரசாரத் தன்மை மகத்துவம் பொருந்திய சித்தர் விஞ்ஞானக் கலையில் ரகசியமாய் அடங்கியிருக்கும் பெரும் செல்வமாகும். இது ஒருவகை தெய்வீக, ஆத்மீக சுதேச வைத்திய விஞ்ஞான தேவ, வைத்தியமாகும். நமது புராதன மருத்துவ விஞ்ஞானக் கலையிலே தேவ வைத்தியம், மானுட வைத்தியம், ராக்ஷஸ வைத்தியம் என மூன்று பிரிவுகளாய் கூறி இருக்கிறார்கள். மூன்றாவது பிரிவாகிய ராக்ஷஸ வைத்தியத்தை கடைசி கட்டமாக உபயோகிக்க கூறப்பட்டிருக்கிறது. நமது தேசம் இடைக்கால ஆட்சி மாறுதல் சுழலில் சிக்குண்டபோது ஏற்பட்ட மேல் நாட்டு மருத்துவ விஞ்ஞானக் கலை மோகத்தால் மூன்றாவது பிரிவு ராக்ஷஸ வைத்தியத்தின் கீழ் அறுவை சிகிச்சை, ஊசிகுத்தல், கட்டுதல், மின்சார சுடுதல் முதலியன முதல் கட்ட கௌரவமான சிறப்புத் தன்மையை அடைந்து விட்டது. மருத்துவ விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்தால் உண்மை விளங்கும். தவிரவும் இந்த தேவ வைத்திய சிறப்பு உணரும் தன்மை நமக்கு குறைவாயிருப்பதும் ஒரு காரணமாகும்.

(தொடரும்)

---

# "நந்தி"க்கு நன்கொடை

செல்ற இதழ் "நந்தி" வெளியானபின் வரப்பெற்ற நன்கொடை விவரம்.

| | |
|---|---|
| சித்த வைத்தியர் சே. கு. முத்தையா, நங்கவள்ளி சேலம் | ரூ. 5 00 |
| அம்பி, ஹோசூர், தம் நண்பர்களிடம் வசூல் செய்தது | ரூ. 79 00 |
| ஆர். எஸ். கே. மூர்த்தி, திருத்துறைபூண்டி | ரூ. 5 00 |

# தேசீய பஞ்சாங்கம்—ஒரு வேண்டுகோள்

(ஈ. எஸ். இராமசாமி சோதிடர், எரிசினம்பட்டி,
உடுமலைப் பேட்டை.)

அகண்டாகாரமான பிரமாண்டத்தின் மத்தியிலுள்ள பூமண்டலம் பல்லாயிர கோடி அண்டங்களில் ஒன்றாகும். சிற்றறிவினனான மனிதனால் அறியும் அவ்வளவும் சரியெனத் தோன்றினாலும் பின் காலத்தின் சோதனையில் மாறுபடக் கூடியதாகும். இந்த வகையில் நூதன வான சாஸ்திரம் வந்து கொண்டுள்ளது. நீண்ட கணக்காகவுள்ள மூல கணிதத்தை சுருக்கும் பொருட்டு தோராயமாக ஆக்கிய வாக்கிய கணிதம் பல நூற்றாண்டுகளாக திருத்துவாரன்றிப் பிழைபட்டுப் போயின. எனவே நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட மேனாட்டு வான சாஸ்திரமும் வாக்கிய கணிதமும் ஒவ்வொரு விஷயங்களால் முற்றும் சரியென்று கூறும்படியில்லை. அவதார ஞானிகளாலோ மூர்த்திகளாலோ உபதேச பரம்பரையாக வந்துள்ள வான சாஸ்திரம் ஆதி வேத போதக மூல கணிதம். எவரும் எப்போதும் திருத்தவேண்டியதுமில்லை. இம் மூல கணிதம் விரிந்த நீண்ட வேலை காரணமாய் யாரும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. என் மூதாதையர்களால் பாதுகாக்கப் பெற்றுள்ள ஓலைச் சுவடி ஒன்றில்.

''மூல கணித மாகாயுக கிரக மகணபதகம்'' என்ற ஜாப்தா ஒன்று 1940, வருடம் தென்பட்டது. இதைக் கொண்டு கிரகதின கதி கோடிதின கதி. சிருஷ்டியாரம்ப ஸ்புடகணிதம் ஒவ்வொரு மநு வந்தர ஸ்புடகணிதம். யுகாரம்ப ஸ்புடங்கள். கிருஷ்ணர் ஜாதகம். தருமர் சனன ஜாதகம். சமாகம கணிதம் உதைய உச்ச காலம் கிரகண கணிதம் முதலிய யாவும் செய்து பரிசோதித்ததில் எவரும் ஆச்சரியப்படும்படி சரியாயிருக்கின்றன. இவை யெல்லாம் கணிக்கும் சுலப முறையாக ஆக்கி பெரிய புத்தக மூலமாக எழுதி 1940-ல் முடிவு செய்து ஆதீன வித்வ சிரோன்மணிகளின் முகவுரை யாதிய பெற்று அச்சுவாகன மேறும் அளவில் பூர்த்தியாகியுள்ளது.

பஞ்சாங்க பேதத்தால் புண்ணியகால கர்மங்கள் உலக க்ஷேமத்திற்கு இழுக்கென இருப்பதை அறிந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் உண்மை பஞ்சாங்கம் ஏற்பட முயன்று வருகின்றார்களென்பதை விளம்பரத்தால் அறிந்தேன்.

உண்மையுள்ள ஒரேவிதமான பஞ்சாங்கம் உலகத்தே வெளி வர வேண்டுமென்ற விருப்பம் எல்லா அறிஞர்கட்கும் இருப்பது இயல்பு. இந்தப் பேரவா பூர்த்தியாகவேண்டிய எண்ணம் நீண்ட ஆலோசனையால் 26 வருடமாய் வெளியாகவில்லை.

எங்கு சங்கம் கூடினாலும் கொண்டு வந்து காண்பிக்கிறேன். பார்த்து ஆவன செய்யலாம்.

# சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

## புது உருவம்

### கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

*காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட* **அல்வா.**

**450** கிராம் டின் ரூ. **4-80**

### ஸ்பெஷல் பர்ஃபி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப்பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

**450** கிராம் டின் ரூ. **4-80**

### வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு. ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

**150** கிராம் டியூப் ரூ. **1-95**

## டாக்டர் நிவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மசுடிகல் மானுபாக்சரர்ஸ், நியூட்ரீமெண்ட்ஸ்,

32, கமலாலயம் வடகரை,

## திருவாரூர்.

*த. பெ. எண்.* **19** (தஞ்சை மாவட்டம்) *தொலை பேசி.* **142**

# ஆங்கில இலக்கியத்தில் திருக்குறட் கருத்துக்கள்

(பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.
தமிழ்ப்பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்)

அறிஞர்கள் நினைப்பது ஒன்றாகவே இருக்கும் என்பது ஆங்கிலப்பழமொழி. "Great men think alike." சாதி, நிறம், இனம், சமயம், மொழி, நாடு, பொருளாதாரம், தொழில் ஆகியவற்றால் மக்கள் வேறுபட்டாலும் கருத்து, நினைப்பு, எண்ணம், உணர்ச்சி ஆகியவற்றால் உலக மக்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். புறத்தால் எவ்வளவு வேறுபாடும் முரண்பாடும் இருப்பினும் அகத்தால் மக்கள் எல்லோரும் ஒருமைப்பாட்டுடன் இருக்கின்றனர். திருவள்ளுவரின் தெளிந்த கருத்துக்கள் ஆங்கில இலக்கியத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கும் திகழ்ந்து கற்போர்க்கு நவில்தொறும் நயம் பயக்கின்றன. திருவள்ளுவர் தெளிவுரையை ஆங்கில அறிஞர்களின் ஆய்வுரையுடன் ஒப்பிட்டு நோக்கி, கருத்து ஒற்றுமையை புலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

திருவள்ளுவர்—டென்னிசன் (Lord Tennyson) இறைவன் உண்டு என்ற அடிப்படைக் கோட்பாடும் அவனை வணங்குதல் வேண்டும் என்னும் எண்ணமும் உலகத்திற்குப் பொதுவானவை. தூய அறிவுடையவனாகிய இறைவனின் திருவடிகளைத் தொழாவிட்டால், கற்றதனால் பயன் என்ன? இவ்வினாவைத் திருவள்ளுவர் மிகத் தெளிவாகக் கேட்கின்றார்.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?' (குறள்)

மக்கள் இறைவன் உண்மையை அறிந்தும் தமக்காகவும் தம் நண்பர்கட்காகவும் இறைவனைக் கை தொழாவிட்டால், அறியாமையில் உழன்று குருட்டு வாழ்க்கை வாழ்கின்ற செம்மறியாட்டுக் கூட்டத்திற்கு ஒப்பாவார்கள் என்று டென்னிசன் தம் கவிதையில் இனிது இயம்புகின்றார்.

For what are men better than sheep or goats, That nourish a blind life within the brain, If, knowing god; they lift not hands of Prayer, Both for themselves and those who call them friends"

—'Morte d' Arthur

இறை வணக்கத்தைக் குறித்து வள்ளுவரும் டென்னிசனும் ஒரே கருத்தைத்தான் செம்மொழியில் செப்புகின்றார்கள்.

# திருவள்ளுவரும் தாகூரும்

## உழைப்பு—பிரிவாற்றுமை

உழைப்பின் அடிப்படையில்தான் உலகம் இயங்குகிறது. உழைப்பின் உயர்வை உலகத்தில் தோன்றிய உத்தமர் அனைவரும் உணர்ந்து தாம் யாத்த இலக்கியத்தில் உரைத்திருக்கின்றார்கள். சோம்பல் வாழ்வு நடத்தாமலும், பிறரிடம் இரந்து உயிர் வாழாமலும், மெய்வருந்த உழைத்து அதனால் பெறுகின்ற பயன் மிகவும் எளிய கூழானாலும் அதை உண்டு உயிர் வாழ்வதைவிட இனிமையானது வேறொன்றும் இல்லை.

"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள் தந்த
துண்ணலின் ஊங்கினிய தில்" [1065]

இருட்டறையின் மூலையில் கண்களை மூடிக்கொண்டு இறைவனை வணங்குபவனைப் பார்க்கின்றார் கவிஞர் தாகூர், இறைவன் ஆலயத்தில் இல்லை; உழைப்பாளியின் அருகில் மழையிலும் வெயிலிலும் எளிய தோற்றத்தோடு உறைகின்றான். உழைப்பின் வடிவமாக விளங்குகின்றான். உழைப்பே கடவுள் என அவனுக்கு அறிவு கொளுத்துகின்றார். 'He (god) is there where the tiller istilling the hard ground and where the path maker is break--ing stones. He is with them in sun and in shower, and his garment is covered with dust. (Gitaujali *11*)

கூடுவதும் பிரிவதும் இவ்வுலகில் நிகழ்கின்ற செயலாகும் கூடும்போது இன்பமும், பிரியும்போது துன்பமும் ஏற்படுவது இயல்பு அதிலும் குறிப்பாகப் புலவர்கள் மகிழ்ந்து கூடி பிறகு மனம் வருந்தப் பிரியும் காட்சி காண்போர் உள்ளத்தை உருக்க வல்லது. இனி எப்போது ஒன்று சேர்வோம் என்ற மன ஏக்கத்தோடு பிரிகின்ற நிலை இதயம் படைத்த எல்லோருடைய உணர்வையும் தொடக்கூடியது. வள்ளுவர் உள்ளமும் தாகூர் உள்ளமும் பிரிவின் கண் ஒரே உணர்வை அடைந்தன என்பது தெளிவு.

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (394)

இது வள்ளுவர் நிலை.

'It is the pang of separation that separates through out the world and gives birth to shapes innumerable in the infinite sky!

(Gitanjali 84)

இது தாகூரின் உள்ளம். இரு கவிதை உள்ளங்களும் ஒன்றையே உணர்த்துகின்றன.

# திருக்குறளும் பைபிளும்

## குற்றம் நீக்கி நன்மை பயத்தல்

பைபிள் கிறித்துவ வேதமாகத் திகழ்வதோடு ஆங்கில மொழியில் தலைசிறந்த இலக்கியமாகவும் இலங்குகின்றது. திருக்குறளுக்கும் பைபிளுக்கும் அடிப்படையில் கருத்தொற்றுமை மிகுதியாக உண்டு. மனிதன் குற்றமுள்ளவன், குற்றத்தைத் திருத்திக் கொண்டு நிறைவுடன் வாழ்வது மனிதன் கடமை. பிறர் குற்றத்தை திருத்து முன் ஒருவன் தன் குற்றத்தைத் திருத்த வேண்டும். அவ்வாறு செய்தால் உலகில் எக்குற்றமும் நிகழாது, என்று குறள் பாடுகின்றது.

> 'தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பிற்கின்
> என் குற்றம் ஆகும் இறைக்கு' (436)

'பிறர் கண்ணிலுள்ள சிறு தூசியைத் துடைப்பதற்கு முன்பு உன் கண்ணிலுள்ள உத்தரத்தை நீக்கு' என்று பைபிள் உரைக்கின்றது. Or how wilt thou say to thy brother, let me pull out the mote of thine eye, and, behold, a beam is thine own eye? (Matt VII-4)

இன்னு செய்தவரை ஒறுக்கும் முறை அவர் நாணுமாறு அவர்க்கு நன்மை செய்வதேயாகும். தீமை செய்தோர்க்கும் நன்மை புரிவதே மனிதப் பண்பின் உயர்ந்த நிலையாகும்.

> 'இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்து விடல்' (314)

> 'இன்னு செய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு' (987)

இயேசு பெருமானை இரக்கமற்றவர்கள் சிலுவையில் அறைந்து துன்புறுத்தியபோது அவர் தம் துன்பத்திற்காக வருந்தவில்லை. மாறாகத் தம்மைத் துன்புறுத்துவோரின் நன்மைக்காக இறைவனை வேண்டுகின்றார். 'தந்தையே அவர்களை மன்னித்து விடுக, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

'Father, forgive them, for they know not what they do.
—(Luke XXIII 34)

பகைவரையும் பரந்த உள்ளத்தோடு பண்புடன் மன்னிக்கின்ற நிலை உயர்ந்த நிலையாகும். மன்னித்ததோடு அமையாது அவர்கட்கு நன்மை புரிகின்ற நிலை பண்பாட்டின் மிக உயர்ந்த நிலையாகும். வள்ளுவரின் உள்ளமும் இயேசு பெருமானின் உள்ளமும் இவ்வுயர்ந்த நிலையில் அமைந்து உள்ளொளி வீசுகின்றன.

# திருக்குறளும் ஆங்கிலப் பழமொழியும்

## ஊர்நடப்பு, தன்வினை, அவையறிவு

கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பொது இலக்கியமாகத் திகழ்வது பழமொழி. திருக்குறட் கருத்துக்கள் ஆங்கிலப் பழமொழியில் மிகுதியாகக் காணலாம். இக்காலக் கல்வித்திட்டத்தின் தலையாய குறிக்கோள் சமுதாய நோக்கமாகும். சமுதாயத்தில் சிறப்பாகவும் திறமையாகவும் வாழ மாணவர்களை உருவாக்குவதே இக்காலக் கல்வியின் குறிக்கோளாகும். உலகத்திற்கு ஏற்ப ஒழுக வேண்டும். அதுவே அறிவுடைமை.

'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்' (140)

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு (426)

இதே கருத்தைத் தாங்கிய ஆங்கிலப் பழமொழி 'ரோமாபுரியில் வாழும்போது ரோமர்களைப் போல் வாழவேண்டும்' என்று கூறுகிறது. 'Do in Rome as Romans do' 'ஊருடன் கூடி வாழ்', 'ஊர் ஓட ஒக்க ஓடு' ஆகிய தமிழ்ப் பழமொழிகளும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன.

உள்ளத்தில் நல்லெண்ணம் எழுந்தால் நன்மை பயக்கும்; தீயெண்ணம் எழுந்தால் தீமை பயக்கும், வினை விதைத்தவன் வினை அறுப்பான். ஒருவன் பிறர்க்குத் தீமை இழைத்தால் அவனே அத்தீமை அடைவது உறுதி. தீய எண்ணமும் தீய செயலும் எப்போதும் தீமை பயக்கும். பிறர்க்குக் குழி தோண்டுபவன் தானே அக்குழியில் விழுந்து விடுவான். இவ்வுண்மையைத் திருவள்ளுவர்

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (319)

என்று மொழிகின்றார். இதே அறிவுரையை ஆங்கிலப் பழமொழியும் கூறுகின்றது. 'Evil to him that evil thinks':

தீயோர் குழுமியுள்ள இடத்தில் நல்ல கருத்துக்களைச் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் அழுக்கான இடத்தில் சிந்திய அமிழ்தத்தை ஒக்கும். அதனால் யார்க்கும் பயனில்லை.

—(குறள்—720)

'பன்றியின் முன்பு முத்துக்களைச் சிந்தாதே' என்ற ஆங்கிலப் பழமொழி குறட் கருத்தையே உரைக்கின்றது. (Do not throw pearls before swine)' 'கழுதை அறியுமா கற்பூர வாசனை' என்ற தமிழ்ப் பழமொழியும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

# திருவள்ளுவர்—ஷேக்ஸ்பியர்

### அகமும் முகமும்

அகத்தில் அமைந்திருக்கின்ற எண்ணத்தை எல்லோரும் அறியுமாறு புறத்தே காட்டவல்ல ஆற்றல் முகத்திற்கு உண்டு. தனக்கு நேராக வைத்த பொருளின் உருவத்தைக் கண்ணாடி மிகத் தெளிவாகக் காட்டுவதைப்போல உள்ளத்தில் பொதிந்துள்ள கருத்தையும் குறிப்பையும் முகம் தெளிவாகப் புலப்படுத்தி விடும்.

'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்'

என்று குறள் பாடுகின்றது உலகம் புகழும் ஆங்கில நாடக ஆசிரியராகிய ஷேக்ஸ்பியர் இக்கருத்தைத் தெளிவுபடுத்துகின்றார். மனக் கருத்தையும் நெஞ்சத்தில் அமைந்துள்ள குறிப்பையும் முகத்தின் வாயிலாக அறிவது அரிய செயலன்று என்று உரைக்கிறார்.

'There's no art
To find the mind's construction in the face,
(macbeth 1, 4)

# திருவள்ளுவர் - ஷெல்லி

### எளியோரும் வலியோரும்

ஒருவன், தன்னைவிட எளியவனைத் துன்புறுத்துங்காலை தன்னின் வலியார் முன் தான் அடங்கி, ஒடுங்கி, நடுங்கி நிற்கும் நிலையை நன்கு உணர வேண்டும் என்று வள்ளுவர்

'வலியார் முன் தன்னை நிலைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லுமிடத்து'

என்ற குறட்பாவில் கூறுகின்றார். கவிஞர் ஷெல்லியின் பாடல் இதே கருத்தைக் கருவூலமாகக் கொண்டிருக்கின்றது.

எளியோர்முன் வீரனைக் காட்சியளிப்பவன் வலியோர் முன் கோழையாகத் தோன்றுகின்றான் என்று ஷெல்லி பாடுகின்றார்.

'He was a coward to the strong
He was a tyrant to the weak'
(Rosalind and Helen)

இரு கவிஞர்களும் மக்களுக்கு இருக்க வேண்டிய அருள் உணர்வை ஒரே வகையில் உரைத்துள்ளனர்.

## திருவள்ளுவர் - பேக்கன் (FRANCIS BACON)

### பகைவர் கண்ணீர்

கண்ணீரில் மூவகையுண்டு. அவையாவன; இன்பக் கண்ணீர், துன்பக் கண்ணீர், வஞ்சனைக் கண்ணீர். பிறரை ஏமாற்றுவதற்குப்பயன்படும் கண்ணீரே வஞ்சனைக் கண்ணீராகும். இதனை முதலைக் கண்ணீர் என்று கூறுவதும் உண்டு. ஆடு நனைகிறது என்று ஓநாய் அழும்போது விடுகின்ற கண்ணீர் முதலைக் கண்ணீர் வகையைச்சேர்ந்தது. பகைவர் தொழும் போது அவர் தம் கையில் கொலைக்கருவியே அடங்கியிருக்கும். அவர் சொரிகிற கண்ணீரும் பிறரை ஏமாற்றிக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது.

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து" (குறள்)

ஆங்கில எழுத்தாளர் பேக்கன், முதலைக் கண்ணீரைக் குறிப்பிடும்போது, முதலை பிற உயிரினங்களைக் கொன்று தின்னுமுன் தான் ஒன்றும் அறியாதது போன்று கண்ணீர் சொரியும் என்று உரைக்கின்றார். 'It is the wisdom of crocodiles, that shed tears when they would devour'. Essays). வள்ளுவர் கூறிய வஞ்சனைக் கண்ணீரும் பேக்கன் குறித்த முதலைக் கண்ணீரும் ஒன்றே.

## திருவள்ளுவர்-வில்லியம் பிளேக் (WILLIAM BLAKE)

### நன்மையே வாய்மை

உள்ளதை உள்ளவாறே சொல்வது வாய்மையன்று. வாய்மையில் தீமை இருத்தல் கூடாது; நன்மை பயத்தல் வேண்டும். ஒருசொல் உண்மையா பொய்யா என்பது அதன் விளைவுக் கொண்டுதான் உறுதி செய்யமுடியும். நன்மை பயத்தால் உண்மை, தீமை பயத்தால் பொய்.

'வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்'' (குறள்)

தீய எண்ணத்தோடு சொல்லப்படுகின்ற உண்மை எல்லாப் பொய் மொழிகளைக் காட்டிலும் கொடியது என்று வில்லியம் பிளேக் கூறுகின்றார்.

'A truth that's told with bad intent
Beats all the lies you can invent'

வாய்மைக்கு இலக்கணம் வகுப்பதில் வள்ளுவரும் பிளேக்கும் அடிப்படையில் ஒன்று படுகின்றனர்.

# நிஜானந்த போதம்

(சித்த வைத்தியர் தில்லை ஆர். விஜயன் பி. ஓ. எல்.
சூளை, சென்னை-7)

(முன் இதழ் தொடர்ச்சி)

ஆணவம் மாய்கை காமியம் இம்மும் மலங்களும் நீங்கில் ஆன்மா அருளோடு கூடிய ஞானமாகும்.

ஒரு பாதையுமின்றி தானாக இருப்பது பிரமம். பிரமம் மாயை யாகிய அவத்தையிற் பிரதிபலித்த போது சீவன். சீவன் அவத்தை யிற் கூடியபோது சுழுப்த்தி. சுழுப்த்தி அந்தக் கரணத்தில் கூடில் சொற்பனம். சொற்பனம் ஐந்து இந்திரியத்தில் கூடில் சாக்கிரம். சாக்கிரம் 96 தத்துவங்களுள் சேர்ந்து விவகாரம்.

ஆச்சப்பா தேகமென்ற வாதாரத்தில் வித்தை என்ற அஞ்சை யுமே சொல்லக்கேளு, மூச்சப்பா லலாடத்தில் சாக்கிரந்தானென்று மூனையான கண்டத்தில் சொற்பனந்தானென்று நீச்சப்பா மார்பின் கீழ் சுழுத்தியொன்று நிச்சயமாய் உந்தியிலே துறியமொன்று வீச்சப்பா விந்தின் மேல் துரியா தீதம் விளங்கி நின்ற அவத்தை யஞ்சும் கண்டுகொள்ளே.

வி, சு கொண்டு ஆடுகிற சக்கரத்தை வினையும் கொண்டுப் பாராமல் வீணாய்ப்போன பிரசைகளைக் கண்டதினால் ஏதுண்டய்யா பிரமான மூலமதில் மனதை வைத்து யுரவான வாசியினால் மைந்தா மைந்தா யூன்றூடும் சக்கரத்தை யுன்னியாட்ட திரமாக சீவர்களை கெதி கொண்டாடும் தீர்க்கமுடன் கேசரியிருவிந்து பாரே.

களையான சீவர்களை தீபம் போலே கண்டுதடா எண்ணை திரி மாண்டபோது, களையான சீவகளையெங்கே போச்சு கண்ணொளி யின் பூரணந்தானெங்கே போச்சு, களையான கதலி குலைசாயும் போது காரணமாய் முன்போலே பின்புண்டோமே களையான சீவகளை பக்கத்தேதான் கண் வெடித்து கதையாச்சு சீவன்தானே.

தானாகித் தான்முடிந்த சூட்சந்தன்னை தரணி தனிலறியாமல் தான் தானென்று ஊனாகி நின்றதொரு உடலைக் காணான் உடலி னின்ற வட்சரத்தினுறுதிகாணான் ஆணாகி நின்ற வடிமுடியுங் காணான் மதிகெட்டு விதியழிந்து மாளுவானே.

மாளுவது ரெண்டுவிதம் மைந்தா கேளு மகத்தான சீவகளை மாறும்போது ஆளுவது பூரணமாய் அறிவோடய்யா யடங்குவது பராபரத்தே யமைப்பேயாகும். சூளுவது நோயுடனே பாசம் சூழ்ந் தால் சுளிவான மதியயங்கியலைவான்பாரு காலு நிலையறியாமல் அலைந்து கெட்டு கானலினும் நீரிலினிலும் கரைந்து போமே.

ஆகையால் அந்தக் கரண வியாபகங்கள் நீக்கி அந்தர் முகநோக் காய் பேச்சுக்கும் மூச்சுக்கும் மத்தி. கண்ணுக்கும் காதுக்கும் மத்தி. கங்குல் பகலாகுமிடத்திற்கும் மத்தி. அறிவிற்கும் மனதிற்கும் நடு நிலையில் நின்றவர்க்கே மெய்ப்போத முதயமாகும்.

நினைவை நீக்கி நோக்கிடில் நிமல சொரூபந் தோன்றிடும் நினைவில் உலக மறிந்ததும் நீங்கிச் சொரூபமறிந்ததும், நினைவினேக்கிற்றுனில்லை நிகழுமாயா மோகமதில்.

தன்னை மறைத்த பந்த மதைத் தள்ளி நீங்கிற்றுன் விளங்கும். தன்னை மறந்ததே பந்தந் தன்னையறிந்ததே முத்தி தன்னை விடவோர் பொருளில்லைத் தானே பிரம்ம மயையும் பின் தன்னை விட வேருய் விளங்கா தானேயாகி விளங்கிடும்.

க்ஷண சிருஷ்டி பிரளயம் தினசிருஷ்டி பிரளயமாகின்ற நினைத்தலும் மறத்தலும் நித்திரையில் தன்னையே மறத்தலாகின்றபடி மரண காலம் எதிரிட்டருப்பது இன்னனுள் என்று தெரிந்து அதற்குள் அடைய வேண்டியபயனை அடையாத நமது இகபோக சுகமும் நடக்கையும் மனவிவகாரமும் யாது பயன்?

ஐம்புலனையும் வென்றவன் வீரமே வீரம், கடவுள் ஒன்றென தெளிந்த பேறறிவே அறிவு, பிறர் துன்புறுதுண்பது ஊண்தான், சாகாமலிருக்க கற்பதே கல்வி, ஆதலால் ஆதி சிருஷ்டி காலமுதல் சிற்றின்ப (யோனி) ஆசை கொண்டு யோனி மூலமாகவே யிச்சை கொண்டபடி ஜென்மமெடுத்து எடுத்து அழிந்து அவ்வப்போது நாம் செய்யும் கர்ம தர்மத்திற்கேற்ப நாமே விதித்துக் கொண்டு பல பிறவிகளுக்காதாரமாக அவ்வகையோனி வழியாகவே அளவிறந்த பிறவிகள் எடுத்தும் இப்போதாகிலும் பிறந்து விட்டேன் இனி பிறவாதிருக்க வரந்தர வேண்டுமென நமது ;ன்னோர்கள் கேட்டபடி யினிபிறவி பெருவண்ணம் பெறவேண்டுமல்லவா? தேகம் நரை, திரை, மூப்பு சாக்காடு பெற்று தேகம் நசிப்பது, சித்தம் தேகத்திலிருந்த சத்து எக்காலமும் நசிப்பதில்லை என்று அனைவரும் புகல்வது பழமொழியாக இருந்தாலும் அனுபவத்தில் சித்தாந்தமாக வேண்டும்.

இப்புவி அத்திப்பழம் போல் பேரண்டம் அதற்குளமைந்த வித்துகள் போல் சித்தண்டங்கள், மேற்கண்ட பேரண்டம் ஆயிரத்தெட்டு கூடியது ஒருபுவனம், இவ்வகை கொண்ட புவனம் 2,214 கூடியது ஒரு சாகரம், சாகரம் ஏழு கூடியது ஒரு பதம் இப்படி 814 கூடியதை பிரபஞ்சமென மேலோர் கூறினர்.

தரணிசலம் கனற் காற்றத்தளவான மரணிய பானுவருந் திங்களங்கி முரணிய தாரகை முன்னிய ஒன்பான் ப்ரணவமாகும் பெருநெறிதானே. சிவசக்தி, நாதவிந்து, சதாசிவம், திகழுமீசன் உவந்தருள் ருத்திரன் மாலயன் ஒன்றின்ஞென்ரும் பவம் தரும் அருவம் நாலினுருவம் நல்லயுபாய மொன்ருய், நவந்தரு பேதமாக நாதனே நடிப்பரென்பர், பிரிதிவு, அப்பு, தேயு, வாய்வு, ஆகாயம், உகார நாதரவி, மகார விந்து சந்திரன், ஓங்காரமகம், மேருசுழிமுனை ஆக இந்த (அஷ்டமூர்த்திஎன) எட்டு விதமாகவும் விளங்குவர் கடவுள் என்று வேத (மறை) கூறுகிறது.

(தொடரும்)

# குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்..
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

(முன் தொடர்ச்சி)

"மதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து"

(பொழுது கண்டு இரங்கல்) 'பதி' என்பது ஊரைக் குறிப்பதாகும் திருப்பதி என்பது அழகிய ஊர். பிறர்க்கும் தமக்கும் வரும் பழிக்காக நாணுகின்றவர்கள் நாணத்திற்கு இருப்பிடமானவர்கள் என்று வையகம் செப்பும்.

"பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு"

(நாணுடைமை) இப்பாவிலுள்ள 'பதி' என்ற சொல்லுக்கு 'இடம்' என்று பொருள்.

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்"

இக்குறளிலுள்ள 'பதி' என்ற சொல்லுக்கு "நிலை" என்று பொருள். இதுபோன்று ஆசிரியர் கையாளுகின்ற சொல்லின் பொருள் வெளித்தோற்றத்திற்கு ஒன்றாகவே தெரியும். சற்று ஆழ்ந்து நோக்குவோமானால் ஒன்றிற்கும் மற்றொன்றிற்குமுள்ள வேறுபாடு தெற்றெனவிளங்கும். ஆகவேதான் உருத்திர சன்ம கண்ணர்

"மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்கு
ஆய்தொறும் ஊறும் அறிவு"

என்று கூறியுள்ளார். வள்ளுவரின் சொல் நுட்பத்தையும் பொருள் நயத்தையும் உணர்ந்த மாங்குடி மருதனார் 'ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி" என்று மொழிந்துள்ளார்.

'வீழ்தல்' என்ற சொல்லை 'விழைதல்' என்ற பொருளிலும் 'சுருங்குதல்' (குறைதல்) என்ற பொருளிலும் திருவள்ளுவர் வழங்கியுள்ளார்.

"தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி"

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"

"வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்"

(தனிப்படர் மிகுதி) மேற்கூறிய மூன்று குறட்பாக்களிலும் வழங்கப்பட்டுள்ள 'வீழ்வார்' என்ற சொல்லுக்கு விரும்பப்படுகின்ற காதலர் என்பது பொருளாகும்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று"

(குடிமை). இக்குறளில் வழங்கியுள்ள "வீழ்ந்த" என்ற பதத்திற்குச் 'சுருங்குதல்' அல்லது 'குறைதல்' என்று பொருள்.

புகழை விரும்பிய இல்லாளை அடையாதார்க்குத் தம்மை இகழ்பவர் முன் சிங்கம்போன்று நடக்கும் பெருமித நடை இல்லை.

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

(வாழ்க்கைத் துணைநலம்) இங்கு வழங்கப்பட்டுள்ள "பீடு' என்பதற்கு 'பெருமிதம்' என்று பொருள். போர்க்களத்தில் ஒன்னாரும் அஞ்சத்தக்க என் வலிமை இவளுடைய ஒளி பொருந்திய நெற்றிக்குத் தோற்று அழிந்துவிட்டது,

"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு"

(தகையணங்குறுத்தல்). இக்குறளிலுள்ள "பீடு" என்ற சொல் 'வலிமை' என்ற பொருளைத் தருகின்றது. பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற செயலை ஒருவன் விளையாட்டாகவும் விழையலாகாது.

"பகை என்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று"

(பகைத்திறந்தெரிதல்) இப்பாவிலுள்ள 'நகை' என்பதற்கு 'விளையாட்டு' என்று பொருள். உயர்குடியில் பிறந்தார்க்கு முகமலர்ச்சி ஈகை இனிய சொல் பிறரை இகழாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகளாம்,

"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை என்ப வாய்மைக் குடிக்கு"

(குடிமை) 'நகை' என்பது இக் குறளில் 'முகமலர்ச்சி'யைக் குறிக்கும். நல்குரவின் காரணமாகச் சோம்பியிருப்பவரைக் க ாால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

''இலமென்று அசை இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்''

(உழவு) 'நகும்' என்ற சொல் 'சிரித்தல்' (பரிகசித்தல்) என்ற பொருளை உணர்த்துகின்றது. கொடை, தண்ணளி, செங்கோன்மை, குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கும் உடைய மன்னன் வேந்தர்களுக்கெல்லாம் விளக்குப் போன்றவனாவான்.

''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி''

(இறைமாட்சி). இவண் வழங்கப்பட்டுள்ள 'ஒளி' என்ற சொல் பிற்கு 'விளக்கு' என்பது பொருள். சூதாட்டத்தை ஒருவன் விழைந்து மேற்கொள்வானேயானால் உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் நீங்கிவிடும்.

' உடை செல்வம் ஊண் ஒளி கல்வி என்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்'' (சூது)

இக்குறளிலுள்ள 'ஒளி' புகழைக் குறிக்கின்றது. ஒருவனுக்குப் பெருமையாவது ஊக்கமுடைமையாகும். அத்தகைய ஊக்கமின்மையே ஒருவனுக்கு இழிவாகும்.

''ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை இளி ஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்'' (பெருமை)

இங்குள்ள 'ஒளி' என்ற பதத்திற்குப் 'பெருமை' என்று பொருள். 'ஏழை' என்றால் 'பொருளற்றவன்' என்பது உலக வழக்கிலுள்ள பொருளாகும். நம் முன்னோர்கள் ஏழையை இரு வகையாக வகுத்துள்ளனர். வறியவனும் ஏழை எனப்படுவான். அதே சமயத்தில் அறிவிலியும் ஏழை என்று அழைக்கப்படுவான். எனவே 'ஏழை' என்ற சொல் அறிவற்றவனையும் பொருளற்றவனையும் குறிக்கும் பொதுப் பெயராக அமைந்துள்ளது. செந்நாப்போதார் 'ஏழை' என்ற சொல்லை 'அறிவிலி' என்ற பொருளில் வழங்கியுள்ளார். தான் தன்னந்தனியாக இருந்து பலருடைய பகையைத் தேடிக் கொள்பவன் பித்துப் பிடித்தவரைவிட அறிவற்றவனாகக் கருதப் படுவான். இதோ அக் குறட்பா

''ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்'' (பகைத்திறம் தெரிதல்)

(ஏழை-அறிவில்லாதவன்) இரப்பினால் வருந்திய சத்தி முற்றப் புலவர் தாமியற்றிய ''நாரைவிடுதூதி''ல் 'ஏழை' என்ற சொல்லை 'வறிஞன்' என்ற பொருளில் வழங்கியுள்ளார்.

''நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
... ... ... ... ... ... ... ... ...
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே''

நண்பர்களுக்கு நல்லவை செய்வதைவிட பகைவர்களைப் பொருந்து மாறு சேர்த்துக்கொள்ளல் விரைந்து செய்யத்தக்கதாகும்.

''நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்'' (வினைசெயல்வகை)

ஒட்டார் என்பது நம்முடன் ஒட்டாத பகைவரைக் குறிப்பதாகும். தன்னை மதியாமல் இகழ்கின்றவனின் பின்சென்று உயிர்வாழ்வதை விட அவனுடைய பழைய நிலையிலிருந்தே அழிந்தான் என்று சொல்லப்படுதல் மிகவும் நல்லது.

''ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று'' (மானம்)

இக் குறளிலுள்ள 'ஒட்டார்' என்ற சொல் 'மதியாமல் இகழ்கின்றவர்' என்ற பொருளைத் தருகின்றது. ஒன்னாரை வெகுண்டு நோக்கிய கண்ணை அப் பகைவருடைய வேலிற்கு அஞ்சி மூடித் திறந்தால் அது புறங்கொடுத்தலோடு ஒத்த தோல்வியேயாகும்.

''விழித்தகண் வேல்கொண்டெறிய அழித்திமைப்பின்
ஒட்டுஅன்றோ வன்க ணவர்க்கு'' (படைச்செருக்கு)

தோல்வி (புறங்கொடுத்தல்) என்ற பொருளையே 'ஒட்டு' என்ற சொல் இங்கு குறிப்பிடுவதாகும். ஒருவனுடைய ஊக்கமே சிறந்த அறிவும் வலிமையுமாகும். ஊக்கமற்ற மக்கள் மரங்களேயாவர். உருவத்தால் மட்டும்தான் வேறுபாடுண்டு.

''உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம் மக்க ளாதலே வேறு'' (ஊக்கம் உடைமை)

இப்பாவிலுள்ள வெறுக்கை என்பது ஊக்க மிகுதியைக் குறிக்கின்றது. எல்லா உறுப்புக்களும் பொருந்தி இடையூறுகளுக்குச் சற்றும் அஞ்சாததாய் உள்ள வெற்றிமிக்க படை வேந்தனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்ததாகும்.

''உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை'' (படைமாட்சி)

இவனுள்ள ''வெறுக்கை'' என்ற சொல்லிற்கு 'செல்வம்' என்று பொருள்.

திருவள்ளுவனர் வழங்கியுள்ள ஒவ்வொரு சொல்லும் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கின்றது. பிறிதோர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து ஏற்ற சொற்களையே ஆசிரியர் எல்லாக் குறட்பாக்களிலும் வழங்கியுள்ளார்.

(தொடரும்)

# சௌந்தரிய லகரி

**(தமிழ் செய்யுளாக்கம் :—வீரை. கவிராஜ பண்டிதர்)**

**(உரை ஆசிரியரும், உதவியவரும் :—சித்த வைத்தியர், எச். பி. முத்துகிருஷ்ணன், நெற்குப்பை, இராமநாதபுரம் மாவட்டம்)**

ஸ்ரீதேவி தோத்திரங்களுக்குள், "சௌந்தரிய லகரி" என்பது மிக்க தலை சிறந்ததொரு நூலாகும். பூராவுமே மந்திர சாஸ்திரங்கள் என்று பெரியோர் கூறுவர். இதனை "ஸ்ரீ வித்யா" என்றும் போற்றுவர். உபநிடதங்கள் பெரும்பாலும், நிர்குண பிரம்மத்தையே பேசுவதால் அதனை "பிரம்மவித்யை" என்று கூறுவர் பெரியோர். நிர்குண பிரம்மத்தை அநுபவத்தில் கொண்டு வழி காட்டுவதே "ஸ்ரீவித்யை"யாகும். அன்னையை வழிபடுவோருக்கு நிர்க்குணமும், ஸகுணமும், கருமமும், பக்தியும், யோகமும், ஞானமும், இல்லறமும் துறவறமும் அத்துவித முதலான தத்துவங்களும், அன்னையின் வழிபாட்டிற்கு உகந்ததாயும், அவளையடையும் மார்க்கமாயும், காட்சியளிப்பனவாய் விளங்கும். பாரத நாட்டில் ஸௌந்தரிய லகரி தேவி உபாஸனைக்கு, ஒரு சிறந்த பொக்கிஷம் ஆகும்.

இதனை சமிஸ்கிருதத்தில் ஆக்கியவர், ஸ்ரீமத் அதிசங்கராசாரியர் ஆவர். இந் நூலினை தமிழ் செய்யுள் வடிவாக, தமிழ் உலகம் உய்யும் பொருட்டு உருவாக்கி அருளிய பெரியார், **கவிராஜ பண்டிதர்** எனப்படுவார். தேவியருள் பெற்ற கவிராஜ பண்டிதர் வீரசோழம் என்னும் ஊரில் (இராமநாதபுரம் மாவட்டம்) நெடுங்காலம் வாழ்ந்து இறுதியில் துறவியாய் ஆங்கே சமாதி கொண்டார், என்ற விபரங்களை, வித்வான் ஸ்ரீ இராகவய்யங்கார் அவர்கள் எழுதிய, "சேதுநாடும் தமிழும்," என்ற புஸ்தகத்திலிருந்து, நாம் அறியலாம். இதற்கு உரை எழுதியவரும் "நந்தி"யில் பிரசுரிக்க உதவியவருமாகிய நெற்குப்பை சித்த வைத்தியர் எச். பி. முத்து கிருஷ்ணன், நூலாசிரியர் கவிராஜ பண்டிதரின் புதல்வர்.

மொழிந்த மறை நூலியற்று மும்படா
　　மணிந்து முதுஞான தானம்
பொழிந்து தன திணைமணியென் றிருசுடரும்
　　புனை களிற்றைப் போற்றல் செய்வாம்.
வழிந்து பெரும் புனல் பரந்து வடவரையிற்
　　றுலகேழு மேழுமொக்க
அழிந்திடினும் அழியாத அபிராமி
　　பாடல் வளம் அளிக்க என்றே.

(உரை) மகாபிரளயமாக. கடல்கள் எல்லாம் தம்தம், எல்லைகளைக் கடந்து, வடமேரு மலையும், முடிவுற்று, அம் மேருவினால், நிலைபெற்ற கீழ (ஏழு உலகங்களும், மேல் ஏழு உலகங்களும், அழிந்திடினும், என்றும் அழியாத அபிராமி அன்னையின் பனுவலாய், நான் சொல்லும் பாடல்களுக்கு வளம் தருக! என்று, பரம சிவனால் சொல்லப் பெற்ற வேதங்கள் என்ற முக படாத்தை அணிந்தும், ஞானம் என்கின்ற மதத்தை பொழிந்தும் சந்திர சூரியர்

ஆகிய இரு சுடரையும்' தனது இரண்டு மணிகளாகவும், புனைந்து விளங்குகின்ற யானையைப் (விநாயகப் பெருமானைப்) போற்றல் செய்வோமாக!!

### இந்நூல் செய்தமைக்குக் காரணம்

இத்தனை நாள் நீ யிருக்க வாயிருக்க
 இயலிருக்க அருள் பாடாமல்
மத்தனையாளுங் கொடியை இப்போதென்
 வழுத்துகின்ற வாறென் பீரேற்
பித்தனையா ரேவல் கொள்வார் பித்தொழிந்தா
 லுரியவர்கள் அடிமை யோலைக்
கொத்தனையா ரேவல் கொள்ளார் கொள்ளும்போ
 தெவனாலே குழப்ப லாமே.

ஹே! மனிதனே!! இத்தனை நாளும் நீ இருந்தாயே! உனக்கு வாயும் இருக்கிறதே! அவ்வாயால், மணக்கும் தித்திக்கும் தமிழ் கவியியற்றும் இயலும், இருக்க, அத்தனும் இறைவனை ஆளும் மலர் கொடியாம் அன்னையை நினைந்தது ஏன்? அவளது அருளைப் பாடாது இப்பொழுது வழுத்துகின்றாய்? என்று என்னை நோக்கிக் கேட்பீராகில்,

பித்தனை யார் ஏவல் செய்வார்? பித்து அவனிடத்து ஒழிந்தால் அவனை உரிமையாக உடையவர்கள் அவர்களது அடிமை சீட்டில் (ஓலையில்) கண்டுள்ள அடிமைகளை யார்தான் ஏவல் செய்ய மாட்டார்கள்? அப்படி எஜமானர், அடிமைகளை ஏவல் செய்யும் போது யாரால்தான் விலக்க முடியும். அப்பணியை, அடிமை விலக்கவும் கூடாதல்லவா?

(உலகின்மேல் வைத்த ஆசாபாசத்தால் பித்தனானேன் அன்னை ஏவல் கொள்ளவில்லை. பின் அப் பித்து ஒழித்தேன். ஆதலின் என்னை ஏவற்கு உரியவனாக்கிக் கொண்டாள். இவ்வாறு கொள்வதனை யாரால் (எவனால்) விலக்க முடியும். விலக்கலும் கூடாது அல்லவா?

யாமளைதன் பெரும்புகழை யாதிமறை
 நாலின்வடித் தெடுத்த நூலை
நாமகள்தன் பாடலிதென் றரனார்க்கு
 நவிலஅவர் நகைசெய் தன்றே
பாமகளை யருகழைத்துப் பருப்பதத்திற்
 பொறித்திருந்த பரிசு காட்டுஞ்
சேமநிதிப் பாடலையென் புன்கவியாற்
 கொள்வ தவன் திறமை யன்றே.

யாமளை என்னும் பெயரை யுடையவளான் ஸ்ரீதேவியினது பெரும் புகழை எல்லா நூல்களுக்கும் ஆதியான வேதங்கள் நான்கி

னுள்ளும், வடித்து சாரமாக எடுத்த நூலை, இறைவியான நாமகள் "இது தனது பாடல்" என சிவபெருமானுக்கு படித்துக் காட்ட, சிவபெருமான் நகைத்து, அப்போது அப் பாமகளை அருகினில் அழைத்துக் கைலையங்கிரியில் பொறிக்கப் பெற்றிருந்த பெருமையினைக் காட்டி சேமம் செய்து வைத்த நிதி போன்ற இப் பாடல்களை என் பொல்லா கவியால் (புன் கவியால்) கொள்வது என்பதும் இறைவியின் திறமையே யாகும். என் திறமையல்லவாம்.

அரன்கயிலைப் புறத்தெழுதப் படுநூலை
அருந் தவத்துப் புட்பதந்தன்
பரந்தவட வரையழுத்த அதைக்கவுட
பாதருளம் பதித்து முற்றுந்
தரம்பெறு சொல்லமுதெனப் பின்
சங்கரமா முனிக்கருள அந்தமேகஞ்
சுரந்துலகில் வாடுமுயிர்ப் பயிர்தழைப்பச்
சொரிந்ததெனச் சொல்வர் நல்லோர்.

சிவபெருமான் உறையும் கைலாயங்கிரியில் எழுதப் பெற்றிருந்த இவ்வரிய நூலை தவசிரேஷ்டனை "புட்பதந்தன் என்னும் ரிஷியானவர் கண்டுணர்ந்து, பரந்த மேருமலையில் பொறிக்க, அந்நூலை கௌடபாதர் என்னும் ரிஷி உள்ளத்தில் பதித்து, இந்நூல் முழுதும், மிக்க உயரிய சொல் அமுதமென்று, பின்னர், சங்கரமா முனிவருக்கு, உபதேசம் செய்தருளி, அப் பெருமாமுனிவன் சங்கராச்சாரியர் என்ற மேகம், அருள் சுரந்து உலகில் பிறப்பு, இறப்பு, முதலிய துன்பங்களில் உலர்ந்து வாழும், உயிர்களாகிய பயிர்கள் தழைத்து ஓங்க இச் சௌந்தரியலகரி என்னும் சிறந்த நூலினை, வடமொழிப் பாவால் சொரிந்தது என்று கூறுவர் நல்லறிவுடைய பெரியோர்கள்.

இன்னதன்மைய நூலினைக்கவி
ராச ராசவ ரோதய
மன்னன் நம்பிர மாதராயன்
வடித்தரும் பொருள் கூறவே
கன்ன லஞ்சிலை வேளனுங்கவி
ராச பண்டிதன் வீரையான்
சொல்நயம் பெறு காவியக்கவி
சொல்வ லென்றுதொ டங்குவான்.

கவி வேந்தர்க்கும் வேந்தனுய், தவத்தின் பயனுய் (வரத்தின் பயனுய்) உதயம் செய்த கவி சக்ரவர்த்தியாம், பிரமாத ராயரென்னும் பெயருடைய பெருந்தகை, மேலே விவகரிக்கப்பெற்ற தன்மையை உடைய, வடமொழி நூலின் சொற்களுக்கு அரிய பொருள்கள் எல்லாம் வடித்துக் கூறவே, வடிவத்தினுலும், காவிய

நயத்தாலும், அழகிய கரும்பு வில்லையுடைய வேள் (மன்மதன்) என்று சொல்லப்பெறும் கவிராஜ பண்டிதன் என்ற சிறப்புப் பெயரை யுடையோன், வீரையென்னும் ஊரையுடையோன், நயம் பெற்று விளங்கும் சொற்களால் தொடுக்கப்பெற்ற காவியத்திற்கு உரியதாகிய தமிழ் கவிதையை சொல்ல வேண்டு மென்று ஆரம் பிப்பான்.

வடமொழி எனும் பழைய விரிகடல்பி றந்திறைவர்
மனையிடை யிருந்து சிலைமேல்
இடுமொடுத வழ்ந்துதன திடுபெயர் சவுந்தரிய
லகரியென நின்று வளர்மாது
அடலரசு முன்பினுள பலமதப்ர பந்தமெனும்
அடுபகைது ரந்தென் மணிநா
நடமிடுபெருங் கவிதை மதகரியொடும் புவியை
நகரிவலம் வந்த திதுவே

வட மொழியிலாகிய பழைய விரிந்த கடலினிடத்தில் பிறந்தும் சிவபெருமான் மனையாகிய கைலாயத்தில் இருந்து வளர்ந்தும், இறைவனுடைய வில் எனப் பெறும் மேருமலையின் கண் மிக்க விரிவுடன் தவிழ்ந்து தனது இடுபெயர் "சௌந்தரியலகரி" என்ற நாமத்தோடு விளங்கி நின்று (போற்றப் பெற்று) சிறந்த அழகினை யுடைய தேவியின் வெற்றி அரசு முன்பாக, உலகத்தில் உள்ள பல மதங்களின் பிரபந்தங்கள் என்னும் போரிடுதலுக்குரிய, பகைமையைத் துறந்து, அழகிய எனது நாவில் ஊறும் கவிதை எனும் மதயானை மேல் ஏறி இப் புவியை நகர் வலம் வந்தது இச்சரிதமாம்

(தொடரும்)

---

## COUNCIL OF STATE BOARDS AND FACULTIES OF INDIAN MEDICINE, DELHI.

மேற் குறிப்பிட்ட கவுன்சிலின் 11-வது மகாநாடு. 1966 ஜூன் 15 லிருந்து 17 வரை சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெறுகிறது. மருந்துக் கண் காட்சியும் நடைபெறும். தமிழகத்திலுள்ள சித்த ஆயுர்வேத, யுனானி வைத்தியர்கள், மருந்து தயாரிப்பாளர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

டாக்டர் டி. பி. இராசகோபால் எச். பி. ஐ. எம். ஆயுர்வேத, பேராராய்ச்சியாளர், கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரி, சென்னை 10 என்ற முகவரிக்கு எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

---

# நோயாளியை சோதனை செய்யும் முறை

(டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.
தமிழக அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரித் தலைவர்)

(முன் இதழ் தொடர்ச்சி)

## நோயாளியை வினவுதல்

**வாந்தி:** ஒரு நாளில் எத்தனை தடவைகள் காண்கின்றன? பகலிலா? இரவிலா? உணவுக்கும் வாந்திக்கும் சம்பந்தம்; உணவிற்குப் பிறகா? வாந்தியினால் வலி குறைகிறதா? அதே நிலையில் இருக்கிறதா?

அளவு, நிறம் தெரிதல் வேண்டும். வாந்தி புளிப்பு தட்டுகிறதா, கசப்பு தட்டுகிறதா? நுரை அதிகமா? அஜீரணமாகாத உணவும் இருக்கிறதா?

**காற்று பரிதல்:** உணவிற்கு சம்பந்தமுண்டா? கீழ்நோக்கியா அல்லது மேல்நோக்கி பரிகிறதா? பரியும்போது நோயின் குணங்கள் குறைகிறதா?

**ஒக்காளம்:**— வாய்நீர் ஊறல் உண்டா? அதிகமா? வயிற்றிலிருந்து பின் நோக்கி வாய்க்குள் நீர் பாய்கிறதா?

**மார்பு எரிச்சல்:** மார்பில் எரிச்சல் உண்டா?

**பேதி:** எத்தனை தடவை? ஒவ்வொரு தடவைக்கும் என்ன இடைக்காலம்? பகலில், எத்தனை தடவை? இரவில் எத்தனை தடவை? என்ன உணவினால் பேதி அதிகரிக்கிறது? பேதி மலத்தின் நிறம்? செறித்ததா அல்லது செறிக்காததா? வெறும் நீர் மலமா? சளி சவ்வு, மலமா? இரத்த மலமா? இரத்தம் கலந்ததா? மலவாய் கடுப்பு உண்டா? முக்கல் உண்டா? மலம் கழியும்போது மலவாயில் வலியுண்டா? நோயாளியின் மலம் கழிய பேதி மருத்துவம் கையாள்வதுண்டா அல்லது வேறு வகையாக மலத்தை கழிப்பதா?

**மலச்சிக்கல்:** சாதாரணமாக எப்பொழுதும் மலம் கழிப்பது எப்பொழுது? தினம் ஒழுங்காக மலம் கழிப்பதுண்டா? தினத்தில் எத்தனை தடவை? மலம் கழிப்பதில் தற்காலம் மாறுதலுண்டா? கடைசியாக கழித்து எவ்வளவு நேரம் ஆயிற்று? மலம் மலவாயின் திட்டத்தை பொருத்தியில்லாமல் தட்டையாகவும் நடுவில் கால்வாய் ஆகவும் குறிகள் கண்டதுண்டா? மலம் கழியும் போதாகிலும் கழிந்த பிறகாகிலும் கடுப்பு உண்டா? வாந்தியுண்டா?

**வலி:** வலியின் இடம், வலியின் பரப்பு, குணம்? விட்டு விட்டு வருகிற வலியா? தொடர்ச்சியான வலியா? எந்த இடத்தில் தீவிரமான வலி? வலி மலம் கழிப்பதாலும் காற்று படுவதாலும் மறைகிறதா?

## கல்லீரல்-பித்தப்பை சம்பந்தமான கேள்வி

**வலி**: காணும் இடம்; சென்ற காலத்தில் முன்பு எப்போதாகிலும் திடீரென இவ்வித வலி இவ்விடத்திலேயே வந்து வந்து மறைந்திருக்கிறதா? அவ்வாருனல் அவ் வலி கண்ட இடத்திலேயே நிலைத்திருந்ததா, பரவிற்ரு? வலி காணும்போது வாந்தி ஏற்பட்டதா? வலி நின்றதும் உடல் மஞ்சளித்ததா? தோள்களில் எப்போதாகிலும் வலி ஏற்பட்டதுண்டா? மலத்திலும் சிறு நீரிலும் மாறுதல் அடைந்ததுண்டா?

## இரத்தம், இரத்தாசயம் பற்றி கேள்விகள்

**சுவாசம்**: எப்பொழுது காண்கிறது? உடல் தொழிலற்று இடக்கையில் காண்கிறதா? அதிக தொழில் புரிந்தால் சுவாசம் காண்கிறதா? எவ்வித தொழில் புரிந்தால் சுவாசம் உண்டாகிறது. இரவில் எப்போதாகிலும் மூச்சு திணரல் ஏற்பட்டதுண்டா? தூக்கத்திலிருந்து திடீரென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்ததுண்டா? அல்லது சுவாசம் வந்தபோது படுக்கையில் உட்கார்ந்து கொண்டே யிருத்தல் வேண்டுமா? படுத்து தூங்கமுடியுமா?

**மார்பு வலி**:—இடம், குணம், பரப்பு, எவ்விதமாக பரவுகிறது? இவ்வித மார்பு வலியில் எது அதிகப்படுகிறது? எது குறைகிறது?

**மார்பு படபடத்தல்**:—மார்பு படபடப்பதற்கு எது காரணம்? எவ்வளவு நேரம் படபடத்து காண்கிறது? மார்பறையின் எதிர் அல்லது முன் சுவரின் இருதய கமலம் அடிபடுதல் தென்படுகிறதா?

**பாதம் வீக்கம்**: பாதத்தில் வீக்கம் கண்டதுண்டா? கண்டு மறைந்ததுண்டா? இருமல் உண்டா? செறிப்புத் தன்மை எப்படி?

**இரத்தம்**: இரத்தம் வீணுக வெளி கழிந்ததுண்டா? மலம் கருப்பாக இருந்ததா? இரத்த மூலம் உண்டா? (பெண்ணுக யிருந்தால்) வீட்டு விலக்கம் அதிகமா காண்கிறதா? குறைவாகவா? உண்பது என்ன விதமான ஆகாரம்? முன்பு என்ன மருந்துகள் உட்கொள்ளப்பட்டன? தொழிலில் நஞ்சுப் பொருள்களை கையாள்வதுண்டா?

மூச்சு திணரல் தலைவலி மயக்கம் மார்பு படபடத்தல் ஆகியவைகள் வந்ததுண்டா?

## சுவாசாசயத்தைப் பற்றிய கேள்வி

குடும்பத்தில் கயம் அல்லது ஈளை நோய் இருந்ததா? நோயாளியின் தொழில்? புகை, நெருப்பிலை அருகாமையில் தொழிலா? அல்லது அதனேடு ஈடுபடுதலா? பசியின் தன்மை? இரவில் வியர்க்கிறதா? உடல் நாளுக்கு நாள் மெலிவடைகிறதா? பீடி, சிகரெட் பிடித்தல் வழக்கமா?

இருமல்—குணம் அளவு எப்போதாவது தீவிர இருமலுடன் மார்பு வலி கண்டதுண்டா?

கோழை: குணம் அளவு இரத்த கலப்பு அப்படியானால் எவ்வளவு?

மார்பு வலி: இடம்; மூச்சினால் அதிகரிக்கிறதா? சதா இருக்கிறதா?

சுவாசம்: முன்பு சுவாசத்தில் கேட்ட கேள்வி (இரத்தமும் இரத்தாசயம் பார்க்க.)

## சிறுநீர் உறுப்புகளைப்பற்றிய கேள்வி

(1) நடுமுதுகிலோ அதன் பக்கங்களில் எப்போதாகிலும் வலி கண்டதுண்டா?

(2) அறையில் வலி ஏற்பட்டு விரையை நோக்கி பரவினதுண்டா?

(3) தலைவலி வாந்தி சோம்பல் பக்கவாதம் வலிப்புநோய்

(4) படுக்கையை விட்டெழுந்ததும் முகம் அதப்பாக இருந்திருக்கிறதா?

(5) பாதம் வீங்கினதுண்டா?

(6) வயிற்று கழிவு அல்லது மலம் நிலைமை?

(7) சிறுநீர்-அளவில் அதிகரித்திருக்கிறதா?

அதிகமான அளவில் இழிவது பகலிலா? இரவிலா? இரவில் சிறு நீர் கழிய படுக்கையிலிருந்து எழுந்திருப்பதுண்டா? குறைந்திருக்கிறதா? தெளிவான சிறுநீரா? கலங்கலாகவுள்ளதா? எப்போதாகிலும் இரத்தம் கலந்துள்ளதா? எந்த வேளையில் இவ்வாறு இரத்தம் கலந்து இருக்கிறது? சிறுநீர் இழிவதில் தவணை அதிகமா குறைவாக நிறத்தில் பேதமுண்டா?

சிறுநீர் கழியும்போது குறியில் வலி ஏற்படுகிறதா? இவ்வித வலி சிறு நீர் கழிவதற்கு முன்பா? பிறகா? இவ்வலியின் தரம்? எவ்விடத்தில் உணரப்படுகிறது? உறுப்புகள் அசைந்தால் வலி அதிகப்படுகிறதா?

## தோலைப்பற்றிய கேள்வி

தின ஒழுக்கம் உணவு, உடை முதலியன? தொழில்? நச்சுப் பொருள்களிடம் சம்பந்த முண்டா? மருந்து ஏதாவது இந்நோய்க்கு முன்பு அருந்தியதுண்டா? கொருக்கு வியாதி தழும்புகள், தடிப்புகள், சிறு பருக்கள்? நமைப்பதுண்டா? இவ்வித நமை எப்போது அதிகம்? இவ்வித தடிப்புகள் மறைந்து மறைந்து மறுபடியும் தோன்றுகிறதா? எல்லா விடங்களில் ஒரே தரமாக இருக்கிறதா?

## மனநோய்ப்பற்றி கேள்வி

(1) நோயாளன் மருத்துவனிடம் பழகும் விதம்? (2) பேசும் விதம் (3) பதில் அளிக்கும் விதம்? அவன் நண்பர்களும் சுற்றத்தாரும் சொல்லும் வரலாறு?

மனநோயாளன் உடை, சுகாதாரம், தின ஒழுக்கம் முதலியவைகளை கூர்ந்து கவனித்தல்.

வாயாடுதல் அதிகமா? மௌனமா? பதில் அளிப்பதில் தாமதமா? கேள்விகளுக்கு கோபமா? பயந்தவனா? அறிவு முழுவதும் இழந்தாகிவிட்டதா? மந்த மயக்கமா? தூக்கமா? அறியாமலே மலம் சிறுநீர் கழிவதா?

சோம்பேறித்தனமா? சுறுசுறுப்பா? மற்றவர்களுடன் பழக்கம்?

## கீல்களின் நோய்பற்றிய கேள்வி

குடும்பத்தில் சுற்றத்தாரில் சந்துவாதம், என்புகயம், என்ற நோய் வாய்ப்பட்டிருந்தார்களா?

நோயாளனுக்கு வெள்ளை, வெட்டை, கொறுக்கு ஆகியவைகள் வந்ததுண்டா? அடிபட்டதுண்டா?

கீல்களில் நோய் இரவில் அதிகமா? பகலில் அதிகமா? கீல்கள் அசைந்தால் வலியா? கீல்கள் அசையாமலிருந்தபோதும் வலியா? கீல்களின் வலியோ வீக்கமோ ஒன்றை விட்டு மற்றொன்றிடம் தாவுகிறதா?

## நோயாளன் தொழில் வரலாறு விசாரித்தல்

(1) தொழிலின் பெயர்? (2) அத்தொழிலில் அவன் உபயோகிக்கும்படியான கருவிகள்? அக் கருவிகள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டவைகள்?

தொழிற்சாலையின் சுகாதாரம்? சுகாதாரம் வசதியுற்றதா? இல்லையா? மண் புழுதியோடு சம்பந்தப்பட்ட தொழிலா?

## நரம்பைப்பற்றிய நோய்களில் கேள்வி :

குடும்ப வரலாறு: வெறிநோய்? பக்கவாதம்? வலிப்பு நோய்?

தொழில் வரலாறு : கொருக்கு, வெள்ளை, வெட்டை? காது நோய்?

வலிப்பு நோயில் கேள்விகள் : எந்த வயதில் வலிப்பு நோய் கண்டது? அவ் வலிப்பு வருவதற்கு தகுந்த காரணங்கள் உண்டா? முதன் முதலில் கண்ட வலிப்பின் வரலாறு? இரண்டாவதாக வந்த வலிப்பு? முதல் வலிப்புக்கும் இரண்டாந்தர வலிப்புக்கும் இடைக்காலம்? தொடர்ச்சியாகவா? அடுத்ததா? இடைக்காலம் அதிகமா? கொஞ்சமா? வலிப்பு தூக்கத்தில் வருகிறதா? வலிப்பு வருமுன்

முற்குறியாவது தோன்றுகிறதா? வலிப்பு திடீரென்று? மெலல மாகவா? தசைகளின் இழுப்பு காண்கிறதா? உடல் முழுவதுமா? அல்லது ஒரே உறுப்பிலா? தசை இழுப்பு எங்கே ஆரம்பம்? முடிவு எங்கே? இந் நோய் காண்பதற்கு முன் எப்போதாகிலும் பலத்த காயம் பட்டதுண்டா?

வலிப்பு நோயில் நோயுற்றவன் கீழே விழுந்து விடுவதுண்டா? நாக்கு கடித்துக்கொள்வதா? சிறு நீராகிலும் மலமாகிலும் கழிவ துண்டா? வலிப்பு கண்ட பிறகு தூக்கம், தலைவலி உறுப்புகள் செயலற்ற தன்மை வருவதுண்டா? மனமாறுதலடைவது வழக்கமா?

சிலரை வலிப்புநோய் என்று கேட்பது பிசகு; அதற்கு பதிலாக "உனக்கு நோவு எப்போது வந்தது" என்று கேட்பது நலம்.

(தொடரும்)


# ஓர் அறிவிப்பு?

வைத்தியர்கள் - டாக்டர்கள் - கம்பவுண்டர்கள் - ஹோமியோபதி வைத்திய சாலைகள் - மருந்துக் கடைகள் – ஜெனரல் மெர்ச்சண்டு & மளிகை கடைகளுக்கும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மிகச் சிறந்த

## மூன்று வகையான பேதி மருந்துகள்!

மாதிரி சாம்பிள் இலவசம்!

1 ரத்னு சுகபேதி அல்வா (இனிப்புள்ளது)
2 S.V.R. சுகபேதி எண்ணை (காப்பியில் சாப்பிட)
3 S.V.R. சுகபேதி மாத்திரை (சக்கரையில் சாப்பிட)

விற்பனையாளர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் சப்ளை செய்யப்படும்.

—— தேவைக்கு எழுதவும் ——

தயாரிப்பாளர்: சித்த வைத்திய பண்டிட்

## S.V.R. கண்டர் சன்ஸ் R.I.M.P.

"இராஜ சித்த வைத்தியசாலை"

அரிசிப்பாளையம் :: சேலம்-9.

N. B:—மற்றும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் கேட்லாக் இலவசம்.

# பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

ராஜ வைத்தியர்

# டாக்டர் C. A. ஜெயராம்



அவர்களின்

60 வருட அனுபவ சக்தி
வாய்ந்த

# சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50

**தங்க ரேக்கு குளிகை**

நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00

**சிட்டுக்குருவி லேகியம்**

வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும், 400 Gram ரூ. 6-00

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00

**பரீக்ஷித்துப் பார்த்தால் பலன் தெரியும்.**

விபரங்களுக்கு எழுதுங்கள் :

## டாக்டர் C. A. ஜெயராம்,

R. I. M. P.

## டாக்டர் C. A. J. நாகராஜன்

யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

பழனி. (SI)